# In the Court of the Principal District Munsif, Padmanabhapuram.

O.S.No. 23/2020 தேதி- 31.10.2025
(P.W.3) - வீரபுத்திரன்

குறுக்கு விசாரணை

1. இவ்வழக்கில் நான் வாதியோ அல்லது பிரதிவாதியோ இல்லை என்றால் சரிதான். நீதிமன்றத்தில் இருந்து அழைப்பானை ஏதும் வந்ததா என்றால் இல்லை. இவ்வழக்கில் வாதி கேட்டுகொண்டதன் அடிப்படையில்தான் வாதிக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். வழக்கு பட்டிகை சொத்தின் ரீசர்வே எண் தெரியுமா என்றால் ரீசர்வே எண்.6/3 ஆகும். இவ்வழக்கு பட்டிகை சொத்து அரசு புறம்போக்கு நிலம் என்றால் நத்தம் புறம்போக்கு நிலம் ஆகும். நான் சொல்வது பொய் என்றாலும் பட்டிகை சொத்து அரசு புறம்போக்கு நிலம் என்றால் சரியல்ல. மேற்சொன்ன பட்டிகை சொத்து நத்தம் புறம்போக்கு என்பதை காண்பிக்க வாதி தரப்பிலோ அல்லது நானோ எந்தவித ஆவணமும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. இவ்வழக்கு பட்டிகை சொத்தில் உள்ள வீடு அரசு அனுமதி பெற்று கட்டவில்லை என்றால் முற்காலங்களில் அரசு புறம்போக்கு நிலங்களில் வீடு கட்டிய பிறகு தான் வரி ரசீது வழங்குவார்கள். வழக்கு பட்டிகை சொத்தின் மேற்கு பக்கம் பெரியார் நினைவு சமத்துவ புரம் அரசால் கட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

2. இவ்வழக்கை வாதி எப்போது தாக்கல் செய்தார் என்ற விவரம் தெரியுமா என்றால் 2020 ஆகும். வாதியின் அப்பா, அம்மா, சகோதரர் எந்த ஆண்டு, மாதம், தேதியில் இறந்தார் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியும் 2017-ல் அவருடைய சகோதரர் இறந்துவிட்டார், அதற்கு முன்பே அவர் அப்பா இறந்துவிட்டார், 1 வருடத்திற்கு முன்பு அம்மாவும் இறந்துவிட்டார். வழக்கு பட்டிகை சொத்தில் கழிவறை, நீர்தேக்க தொட்டி, கிணறு, வாதியால் அரசிடமோ அல்லது பஞ்சாயத்திடம் அனுமதி பெற்று கட்டவில்லை என்றால் சரிதான். நான் என் முதல் விசாரனை வாக்குமூலத்தில் பட்டிகை சொத்தின் அருகில் பெந்தேகோஸ்தே சர்ச் பற்றி வாதி தன்னுடைய வாதுரையில் குறிப்பிட்டுள்ளாரா என்றால் அதுபற்றி தெரியாது. வாதி அரசு புறம்போக்கு இடத்தை ஆக்கிரமித்து சட்ட விரோதமாக கட்டுமானம் கட்டியுள்ளார் என்றால் சரியல்ல. வாதியின் அப்பா பெயர் என்ன என்றால் ராஜையன் ஆகும். வாதியின் தந்தைக்கு அரசால் B-Memo வழங்கப்பட்டுள்ளது என்ற வவிவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். B-Memo அடிப்படையில் அரசு புறம்போக்கு நிலத்தை ஆக்கிரமித்துள்ளவர்களை அரசு

தேவையின் போது ஆக்கிரமிப்புகளை அகற்றி மேற்சொன்ன நிலத்தை கையகப்படுத்த அரசுக்கு உரிமையுள்ளது என்றால் சரியல்ல. அரசு புறம்போக்கு நிலத்தை ஆக்கிரமிப்பு செய்து கொண்டு அரசுக்கு எதிராக எந்த ஒரு உரிமையும் கோரமுடியாது என்றால் சரியல்ல. இவ்வழக்கை தாக்கல் செய்ய வாதிக்கு எவ்வித உரிமையும், மூல காரணமும் இல்லை என்றால் சரியல்ல. வாதிக்கு ஆதரவாக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் என்னுடைய சாட்சியம் நிலைக்கததக்கதல்ல என்றால்சரியல்ல. வாதி தாக்கல் செய்துள்ள வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.